அட்டாளைச்சேனை பிரதேச சபை.
அம்பாரை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 17 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்ளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பேணப்படுகின்ற பதிவேட்டின்படி மீளாய்வாண்டின் இறுதி வரை பெறவேண்டிய திண்மக்கழிவு சேவை நிலுவைக் கட்டணம் ரூபா 2,791,300 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,674,325 தொகையாக காட்டப்பட்டிருந்தமையினால், ரூபா 116,975 தொகையினால் நடைமுறைச் சொத்து மற்றும் ஆண்டுக்கான மிகை வருமானம் என்பன குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சின் பிரகாரம் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட 614 நூலக புத்தகங்களின் பெறுமதியானது ஏடுகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

தெரு விளக்கு மின்பாவனை தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 316,421 மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்படவேண்டிய வருமதிகள் ரூபா 350,321 என்பவற்றை செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 22 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக 1998 ஆம் ஆண்டின் படியான கணக்கு மீதிகளாக முன்கொண்டு

வரப்பட்டிருந்த ரூபா 2,377,355 கூட்டு மொத்தத் தொகையான 06 விடயங்கள் தொடர்பில் விபரமான ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று வருட்ஙகளுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 4,461,308 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 90 வைப்புக்கள் தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (இ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 576,200 | கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 7,585,750 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 6,121,136 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,464,614 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) வீதவரிகளும் வரிகளும் | 533 | 525 | 525 | - | 612 | 353 | 353 | - |
| (ii) வாடகை | 1,700 | 1,941 | 1,941 | 273 | 1,650 | 1,040 | 1,040 | 273 |
| (iii) உரிமைக் கட்டணம் | 1,705 | 1,071 | 1,071 | - | 1,460 | 1,239 | 1,239 | - |
| (iv) ஏனைய வருமானம் | 21,195 | 18,805 | 15,382 | 6,293 | 19,085 | 18,420 | 17,160 | 2,520 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 25,485,000 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 18,918,939 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமான 74% ஆக காணப்பட்டிருந்தது.

### 2.2.3 இறைச்சிக் கடைக் குத்தகை அறவீடு

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 273,300 நான்கு ஆண்டுகளாக அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது.

### 2.2.4 வியாபார உத்தரவுப்பத்திர கட்டண அறவீடு

மீளாய்வாண்டில் சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அமையப்பெற்றுள்ள 29 வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப் பத்திர கட்டணம் ரூபா 52,700 தொகையை 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 52 விளம்பரப் பலகைகளுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 607,200 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காரைதீவு பிரதேச சபையிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,253,542 திண்மக்கழிவு நில நிரப்பு கட்டண நிலுவையினை 02 ஆண்டுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சபையின் கொல்களத்தில் இறைச்சிக்காக 2,671 மாடுகள் அறுவை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் தோல்களை தோல் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் தனிநபர் ஒருவரிற்கு இலவசமாக வழங்கியிருந்ததனால் சபை ரூபா 400,650 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு 05 ஆண்டுகளிற்கு மேல் பயன்படுத்தப்படுகின்ற 08 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் 06 ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன் ரூபா 144,650 தொகையினை உரிய ஊழியர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமல் 02 வருடத்திற்கு மேல் நிலுவையாகக் காணப்படுகிறது.

(இ) 2012 முதல் மீளாய்வாண்டுவரைக்குமான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபைகளின் சிபாரிசின்படி 35 வகையான 238 பொருட்கள் பற்றாக்குறையாக காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் பொதுநூலகமானது பொதுச்சந்தைக்கருகாமையில் அமையப்பெற்றுள்ளமையினால், நூலகத்திற்கு வருகை தரும் வாசகர்கள் வாகன மற்றும் பொதுமக்களின் சத்தம் காரணமாக இடையூறை எதிர்நோக்குவதோடு, சந்தைக்கு வருகின்ற வாகனங்கள் நூலக வாயிலில் நிறுத்தப்படுவதனால் வாசகர்கள் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படுகின்றது.

3.2 ஆளணி முகாமைத்துவம்

வேலை மேற்பார்வையாளர், இயந்திர இயக்குனர் மற்றும் நூலக சேவையாளர் ஆகிய 03 பதவிகள் 02 ஆண்டுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படுவதோடு அவர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் காலதாமதமும் சிக்கல்களும் காணப்படுகின்றது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 ஆம் ஆண்டில் காணாமல்போன ரூபா 96,392 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 170,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு பாலமுனை - ஒலுவில் பிரதான வீதியில் பொருத்தப்பட்ட சூரிய மின்சக்தியில் இயங்கும் 02 மின்குமிழ்கள் மற்றும் பொருத்துக்கள் 2015 திசெம்பர் 20 ஆம் திகதி களவாடப்பட்டமை தொடர்பாக 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரை நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் பாலமுனை கடற்கரை சிறுவர் பூங்காவில் ரூபா 4,817,638 செலவில் 06 வகையான 11 விளையாட்டு உபகரணங்கள் சபையினால் பொருத்தி முடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இப்பூங்காவிற்கான மலசல கூட வசதிகள், குடி நீர் வசதி, மின்சார வசதிகள், நிழல் மரங்கள் மற்றும் இருக்கைகள் போன்ற வேலைகள் இன்றுவரை பூர்த்தி செய்யப்படாமையினால், இப்பூங்காவைப் பயன்படுத்தும் சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அதிக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(இ) 2014 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,400,000 நிதியைப் பயன்படுத்தி பள்ளக்காடு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்குகளின் எலும்புகளை அரைக்கும் நிலையம் மற்றும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2018 செப்தெம்பர் 17 ஆந் திகதி வரை பாவனையின்றி காணப்படுகின்றது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
--------------------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | i. திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல்<br>ii. திண்மக் கழிவு சேவைக் கட்டண அறவீடு |